

யாதுமாகி நிற்பாள்

பாமா ஹரிராம்

சந்திப்பு: வனராஜன்

# மரமேறினால் மலேசியா போகலாம்!

மெத்த படித்த பெண்கள் கூட வெளிநாடுக்கு வேலைக்கு செல்ல முயற்சி செய்தால் வாய்ப்பு அவ்வளவு எளிதாக கிடைத்து விடுவதில்லை. ஆனால், மரமேறும் பயிற்சி இருந்தால் உடனே மலேசியா போகலாம். கைநிறைய சம்பாதிக்கலாம்.

**தி**ண்டுக்கல்லில் இருந்து 11 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது சின்னாளப்பட்டி. காந்திய கிராமம் வளாகம். பசுமையான தென்னந் தோப்பு. காலை 6 மணி யோகா, உடற்பயிற்சி செய்துவிட்டு 8 மணிக்கு மரமேற தயாராகிறார்கள் பெண்கள். இரண்டு பயிற்சியாளர்கள் உதவி செய்கிறார்கள். தொடர்ந்து ஆறு நாட்கள் பயிற்சி. இறுதியில் கஷ்டப்படாமல் சுலபமாகவும் எளிதாகவும் மரமேற கற்றுக் கொள்கிறார் கள். இந்தப் பயிற்சி பெறும் சில பெண்கள் தென்னை மர தோப்பிற்கே சொந்தகாரர்கள். பலர் வயிற்று பிழைப்புக்காக தொழில் கற்றுக் கொள்ள வந்தவர்கள்.

**பெண்கள் இந்தப் பயிற்சி பெற என்ன தகுதி வேண்டும்? பயிற்சி யாளர் பாமா ஹரிராமிடம் கேட்டபோது...**

"8ம் வகுப்பு படித்திருக்க வேண்டும். நல்ல உடல் திறன் உள்ளவராக இருந்தால் மட்டுமே போதுமானது. அதிக எடை கொண்டவர்கள் பயிற்சி பெற தகுதியில்லை. 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

இவர்களுக்கு தென்னை மர பராமரிப்பு எனப்படும் 'பிரெண்ட்ஸ் ஆஃப் கோக்கநட்' என்ற பயிற்சி வழங்கப்படுகிறது. இதில் தென்னை மரத்தின் ஒட்டு மொத்த வரலாறு என்ன? என்பதை சொல்லிக் கொடுத்து விடுவோம். இதனால் 100 தென்னை மரங்கள் அடங்கிய தோப்பைக்கூட பெண் ஒருவர் தனியாக இருந்துப் பராமரிக்க முடியும். இது வரை எங்களிடம் 15 பெண்கள் பயிற்சி பெற்று இருக்கிறார்கள். கூலிக்காக வேலைக்குச் செல்பவர்கள் நாள் ஒன்றுக்கு 500 ரூபாய் வரை சம்பாதிக்கிறார்கள். இந்தப் பயிற்சி பெற்ற பெண்கள் பற்றிய விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்து விடுவோம். இதனைப் பார்த்த மலேசிய நிறுவனம் ஒன்று இவர்களை பணியில் அமர்த்திக் கொள்ள முன் வந்துள்ளது. அதிக மான ஊதியமும் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிறுவனத்தைப் பற்றி தூதரகம் மூலமாக விசாரணை செய்த பின் அங்கே பெண்களை பணிக்கு அனுப்ப திட்டமிட்டு இருக்கிறோம். இந்தப்பயிற்சியை இலவசமாக சொல்லி தருகிறோம். பங்கேற்பவர் களுக்கு மரம் ஏறும் கருவி, ஒரு லட்சம் ரூபாய் காப்பீடும் செய் கிறோம். ஆனாலும் பயிற்சி பெற பெண்கள் பயப்படுகிறார்கள். எங்கே கீழே விழுந்துவிடுவோமோ என்று நினைப்பவர்கள் அதிகம். மரம் ஏற சுடிதார் போட வேண்டும். கிராமத்து பெண்கள் பெரும்பாலானவர்கள் சுடிதார் போட தயங்குகிறார்கள்.






எனக்கு திருமணமாகிவிட்டது. பி.காம் வரை படித்திருக்கிறேன். தினசரிகளில் வந்த விளம்பரத்தைப் பார்த்து இந்தப் பயிற்சிக்கு சென்றேன். ஏழே நாட்களில் மரம் ஏற கற்றுக்கொண்டேன். இப்போது நானே பத்து பெண்களுக்கு பயிற்சி கொடுக்கிறேன். அதிகம் படித்த உனக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை என்று சொன்னவர்களே அதிகம். ஆனாலும், வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இந்தப்பயிற்சியை பெற்றேன். இப்போது நானே 500 மரங்கள் அடங்கிய தோப்பை பராமரித்து விடுவேன்'' என்று திடகாத்திரமாகப் பேசுகிறார் பட்டிவீரன்பட்டியைச் சேர்ந்த **பாமா ஹரிராம்.**

''**தி**ண்டுக்கல்லை சுற்றியுள்ள வத்தலகுண்டு, நத்தம், அய்யம் பாளையம், பட்டிவீரன்பட்டி என பல இடங்களில் தென்னை மர தோப்புகள் அதிகம். அதனால் பயிற்சி முடித்தவர்கள் உடனே வேலை வாய்ப்பு பெற்று தங்கள் வாழ்க்கை தரத்தை முன்னேற்றி இருக்கிறார்கள்'' என்கிறார் பெண்களுக்கு பயிற்சியளிக்கும் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் **ஸ்ரீகுமாரி.**



''**பி**ளஸ் 2 படித்த நான் கம்ப்யூட்டரில் டிப்ளமோ படித்துள்ளேன். வாழ்க்கையில் நாமும் எளிதாக முன்னேறலாம் என்ற மன வலிமையை இந்த பயிற்சி எனக்கு தந்து இருக்கிறது. வானமும் தொட்டு விடும் தூரம் தானே என்ற நினைத்தால் தென்னை மரம் உயரமாகத் தெரிவதில்லை. என்னுடன் பயிற்சி எடுத்த பெண்கள் அனைவருமே நன்கு படித்தவர்கள். ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள்'' என்கிறார் **திவ்யா.**

''**ஆ**ண்களுக்கு நிகராக நாங்களும் அனைத்து துறைகளிலும் சாதிப்போம் என்பதற்கான ஆரம்பக்கட்டம் தான் இந்த சாகசம். மரம் ஏறுவது என்பது அவ்வளவு எளிதான வேலையில்லை. அதையும் சவாலாக ஏற்று 2 நாளில் கற்றுக்கொண்டோம். மரமேறிய நாங்கள் அடுத்து விமானம் ஏறப் போகிறோம்'' என்கிறார் பெருமிதத்துடன் சொல்கிறார் **அனிதா.**